## <u>காரமடை நகராட்சி</u>

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ம் நாள் வெள்ளி கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூட்டத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்</u>**

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

---

**<u>பொருள் : 01</u>**

காரமடை நகராட்சி ஆணையாளரது நவம்பர்-2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**
பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1)

**<u>பொருள் : 02</u>**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் கீழ்காணும் விபரப்படி காரமடை நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டதில் அதிக தொகைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | 2021-2022ம் ஆண்டு ஏலத் தொகை (ரூ) | மூன்றாண்டு சராசரி (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | அண்ணா பேருந்து நிலைய கடை எண்.07 (ஒப்படைக்கு நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு –மாத வாடகை அடிப்படையில்) | 52176 | 52176 | மாத வாடகை ரூ.4650/- வீதம் வருட வாடகை ரூ.55,800/- ஒப்பந்தப்புள்ளி (11ஆம் அழைப்பு) | திரு.ஜெ.சர்தார் | சென்ற வருட ஏலத் தொகையினை விட ரூ.3624/- கூடுதலாக உள்ளதால் அங்கீகரிக்கலாம். |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மேற்கண்ட ஏல இனம் 11 அழைப்பு கோரப்பட்டதில் 10 அழைப்புகளில் ஏலம் கோர எவரும் வரவில்லை. 11ம் அழைப்பில் மேற்கண்ட கடைக்கு அதிகபட்சமாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் கலம் 7ல் குறிப்பிட்டுள்ளபடி ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுக்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏல இனம் ஊர்ஜிதம் செய்து கொடுத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.எ.எண்.559/2022/அ1)

**<u>பொருள் : 03</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022–23ன் கீழ் 53 பணியாளர்கள் 61 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 27.10.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்காணும் விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சியில் 53 பணியாளர்கள் 61 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 28.585 | திருவாளர்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் | 20.81% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர்.அருணாள் கம்ப்யூட்டர் பார்ம்ஸ் | 21.08% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு தொகைக்கு அதிகமாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி தொகை குறைத்து கொடுக்க இரு ஒப்பந்ததாரர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. அதில் திருவாளர்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்தாரால் 0.12% மதிப்பீட்டிற்கு குறைவாக செய்து கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்து 28.11.2022ம் தேதி கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடிதத்தின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1883/2022/எச்1)**

**<u>பொருள் : 04</u>**

காரமடை நகராட்சியில் 2022–23ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவைகள் அறிவிப்பு திட்டத்தின் கீழ் நகராட்சியில் கூடுதல் அறைகள் கட்டும் பணி மேற்கொள்ளுவதற்கு 07.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்காணும் விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சி அலுவலக தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் கூடுதல் அறைகள் கட்டுதல். | 200.00 | திரு.டி.ரவிச்சந்திரன் | 8.11% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.டி.ராதாகிருஷ்ணன் | 15.70% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு தொகைக்கு அதிகமாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி தொகை குறைத்து கொடுக்க இரு ஒப்பந்ததாரர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. அதில் ஒப்பந்ததாரர் திரு.டி.ரவிச்சந்திரன் என்பவரால் 4.95% மதிப்பீட்டிற்கு அதிகமாக செய்து கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்து 02.11.2022ம் தேதி கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடிதத்தின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி

கொடுத்துள்ள திரு.டி.ரவிச்சந்திரன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

இப்பணி திட்டப்பணி என்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1295/2022/இ1)

**பொருள் : 05**

இந்நகராட்சி வரிவசூல் மையத்தில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் தொகைகளை வசூல் செய்து கணக்கிட்டு வங்கி கணக்கில் செலுத்துவதற்கு தேவையான 2 எண்கள் Cash Counting Machines விநியோகம் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்.சிக்மா பிசினஸ் லிங்க்ஸ், கோவை | 17950/- |
| 2. | திருவாளர்.சாய் பிரிண்டர்ஸ்/ காபியர்ஸ், கோவை | 17450/- |
| 3. | திருவாளர்.டிரீம்டெக், கோவை | 16650/- |

**அலுவலக குறிப்பு :-**

அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 06**

காரமடை நகராட்சியில் புதிய அலுவலக கட்டிடம் கட்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அறிவிப்புகளின் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது உள்ள கணினி வரிவசூல் மையம் மற்றும் சேவை மையம் உள்ள இடம் மேற்கண்ட அலுவலகக் கட்டிடப் பணிகள் மேற்கொள்ள இடையூராகவும் மற்றும் பொது மக்கள் வரி செலுத்த வரும் போது சிரமமாக உள்ளதாலும் மேற்கண்ட வரிவசூல் மையத்தினை அலுவலக வளாகத்தில் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்து மின்சாரம், இணையதள வசதி மற்றும் மேசைகள் இருக்கைகள் ஆகியவை அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இப்பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 07**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான இரண்டு எண்ணம் Plug Fogg Machine முற்றிலும் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. இவற்றை சரிசெய்ய பட்டியல் கோரியதில் ரூ.26,000/- ஏற்படும் எனவும் 6 மாத பழுது நீக்கம் பணிக்கு Service Charge செலுத்த வேண்டியதில்லை எனவும் உதிரிபாகங்கள் மாற்றினால் அதற்கு தொகை செலுத்தினால் போதும் எனவும் தி/வா.ஏ.ஜெ.அக்ரோ டூல்ஸ், கோவை நிறுவனத்தாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள செலவுத் தொகை ரூ.26,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3675/2022/எச்1)

**பொருள் : 08**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான பிறப்பு இறப்பு பதிவேடுகள் பேரூராட்சியாக இருந்த காலத்தில் சார்பதிவாளர், மேட்டுப்பாளையம் அவர்கள் வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்பு மேற்படி பிறப்பு இறப்பு பதிவேடுகள் முதல் கட்டமாக 1990 முதல் 2018 வரை திரும்ப பெறப்பட்டு அவற்றை முறையாக பைண்டிங் செய்து முறைப்படுத்தப்பட்டது. மேற்படி பதிவுகள் கணினியில் பதிவேற்றம் செய்யப்படாததால் பொது மக்கள் சம்பந்தப்பட்ட இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்ய முடியவில்லை என்பதால் நாடு முழுவதும் 2013 முதல் 2018 வரையுள்ள பிறப்பு இறப்பு பதிவேடுகளை முதற்கட்டமாக CRS இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.Letter No.7289/AB-2/2022-6, நாள்.14.11.2022ன்படி ஆணை வெளியிட்டதன்படி காரமடை நகராட்சியில் 1990 முதல் 2018 வரை 29 ஆண்டுகளுக்கான பதிவுகள் CRS இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏதுவாக 3 (மூன்று) Data Entry Operators மற்றும் 3 புதிய கணினிகள் வாங்க அனுமதிக்கவும் அல்லது 1 பதிவுக்கு ரூ.5/- என தனியார் கணினி மையத்தில் பதிவேற்றம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3675/2022/எச்1)

**பொருள் : 09**

காரமடை நகராட்சியில் 15.12.2022ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்கு உட்பட்ட 5 சமுதாய கழிப்பிடங்களில் நேப்கின் இன்சினேட்டர் சப்ளை செய்து பொருத்துதல். | திருவாளர்.யுத்செவ் டிரேடர்ஸ், கோயம்புத்தூர் | ரூ.53,000 / 1 எண்ணிக்கை |
| | | திருவாளர்.ஏ.கே.டி. என்டர்பிரைசஸ், காஞ்சிபுரம் | ரூ.49,560 / 1 எண்ணிக்கை |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண்.3200/2022/எச்1)

**பொருள் : 10**

காரமடை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிக்கு 1 MCC கட்டும் பணிக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் உரக்கிடங்கு முழுவதும் கொட்டப்பட்ட குப்பையை ஒழுங்கு படுத்தும் (கீப்பிங் செய்தல்) பணிக்கு ஏற்கனவே ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்ய உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் அனுமதிக்கப்பட்ட தொகை தீர்ந்து விட்டதால் பணியில் 50% மட்டுமே முடிவுற்றுள்ளது. தற்போது மேலும் கூடுதலாக 1 MCC கட்டிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20860/2022/SBM,

நாள்.05.12.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் போதிய நிலம் இல்லை என்பதாலும், பார்க் சைட் இடங்கள் யாவும் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ளதால் பொது மக்கள் ஆட்சேபனை வரும் என்பதாலும், தற்போதுள்ள உரக்கிடங்கில் போதிய இடம் உள்ளதனால் அதனை சமப்படுத்தி கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருப்பதனால், குப்பைகளை கீப்பிங் செய்ய கூடுதலாக ரூ.5.00 இலட்சம் அனுமதிக்கவும், தொடர்ந்து பணி செய்ய தற்போது பணி செய்து வரும் திருவாளர்.ஸ்ரீ ரூபா டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்திரவை நீட்டித்து செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.3200/2022/எச்1)

**<u>பொருள் : 11</u>**

காரமடை நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மைப் பணி மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்து ஓர் ஆண்டுக்கு மேல் ஆனதால் பணி செய்ய தேவையான தளவாட பொருட்கள் இல்லை என்பதால் எதிர்வரும் காரமடை அருள்மிகு ஸ்ரீ அரங்கநாத சுவாமி திருக்கோயில் திருத்தேர் பெருந்திருவிழாவிற்கு குறுகிய காலம் உள்ளதால் கூட்டு துப்புரவு பணிக்கும் போதிய பொருட்கள் தேவை உள்தால் கீழ்காணும் பொது சுகாதார தளவாட பொருட்கள் கொள்முதல் செய்ய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1) மண்வெட்டி | - 50 எண்ணம் |
| 2) களைகொத்து (அரை மண்வெட்டி) | - 150 எண்ணம் |
| 3) கடப்பாரை | - 20 எண்ணம் |
| 4) கைத்தகரம் | - 200 எண்ணம் |
| 5) கூடை (அலுமினிய சட்டி) | - 200 எண்ணம் |
| 6) சீமாறு (தென்னை மரம்) | - 2000 எண்ணம் |
| 7) பெரிய கூட்டுமாறு (மூங்கில் மாறு) | - 200 எண்ணம் |
| 8) சாக்கடை வாறு கரண்டி (பேட்) | - 200 எண்ணம் |
| 9) மூன்று பல் கொக்கி கைப்பிடியுடன் | - 50 எண்ணம் |
| 10) ஐந்து பல் கொக்கி கைப்பிடியுடன் | - 50 எண்ணம் |
| 11) கையுரை (ரப்பர் கிளாத்) | - 1000 எண்ணம் |
| 12) முகவுரை | - 5000 எண்ணம் |
| 13) கதிர் அறிவாள் | - 200 எண்ணம் |
| 14) அறுவாள் | - 40 எண்ணம் |

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண். /2022/எச்1)

**<u>பொருள் : 12</u>**

காரமடை நகராட்சி 19.83 ச.கி.மீட்டரில் 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் திறந்தவெளிகள் அதிகம் உள்ளதால் புல்பூண்டு செடிகொடிகள் அதிகளவில் உள்ளதை மன்ற உறுப்பினர்கள் புல்வெட்டும் இயந்திரத்தை அதிகமாக கோருவதால் 20 எண்ணம் புல்வெட்டும் இயந்திரம் கொள்முதல் செய்யவும் அதற்காகும் செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண். /2022/எச்1)

**பொருள் : 13**

காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீ அரங்கநாதர் திருக்கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் மாசி மாதம் மகம் நட்சத்திரத்தில் நடைபெறும் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 20000 மக்கள் கூடுவார்கள் மற்றும் தேர்த்திருவிழா அன்று சுமார் ஒரு இலட்சம் வரை மக்கள் கூடுவதால் சிறப்பு துப்புரவுப்பணி, கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி செய்யவேண்டியுள்ளது. குறிப்பாக நாள் ஒன்றுக்கு சராசரியாக 5 மெட்ரிக் டன் திடக்கழிவும் சேகரமாகும். இதன் மூலம் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ரூ.40.00 இலட்சம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்படி திருவிழாவானது அரசு வரையறுக்கப்பட்ட விழாவாக உள்ளதால் செலவினத்தொகையை கோயில் நிர்வாகத்தில் பெற வழிவகை உள்ளதால் அதற்குரிய கோப்புகளை தயாரித்து அனுப்பிவைக்கவும், திருவிழா காலங்களில் பொது மக்கள் நலன் சார்ந்த விஷயங்களை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**செய்யப்படவேண்டிய பணிகள்.**

1) குடிநீர் வசதி (10 இடங்களில் ஸ்டாண்டுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் வைத்து, தண்ணீர் லாரிகள் மூலம் குடிநீர் வசதி செய்தல்)

2) கிருமி நாசினி தினமும் தெளிக்கும் வகையில் (3 டன் பிளீச்சிங் பவுடர், 9 டன் சுண்ணாம்புத் தூள், 1000 லிட்டர் பினாயில்)

3) மொபைல் டாய்லெட் 6 இடங்களில் (ஆண், பெண் தனியாக தலா 5 எண்ணிக்கையில்)

4) திடக்கழிவுகள் சேகரம் செய்ய கூடுதல் 5 வாகனங்கள் 24 மணி நேரமும் வாகனம் இயக்கும் வகையில் நாள் வாடகை அடிப்படையில் பயன்படுத்துதல்.

5) 15 நாட்களுக்கு தற்காலிக தூய்மைப் பணியாட்கள் 50 நபர்கள் பயன்படுத்துதல்.

6) பக்தர்கள் தங்கும் நிழல் பந்தல்கள் அமைத்தல். (2 இடங்களில்)

7) கிருமி நாசினி தெளிப்பு செய்ய 10 எண்ணம் பேட்டரி ஸ்ப்ரேயர்.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண். /2022/எச்1)

**பொருள் : 14**

காரமடை நகராட்சி 24வது வார்டில் வாரசந்தை மற்றும் தினசரி மார்க்கட் உள்ளது அதில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டப்பட்டு வருகிறது. அதற்கு போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் அந்த கழிப்பிடத்தின் அருகில் ஒரு ஆழ்துளை கிணறு அமைக்க ஆகும் செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 15**

காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.17,21,27,2,23,25 ஆகிய வார்டுகளில் உள்ள இடங்களில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனால் இப்பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு மூலமாக குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 16**

காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 15–ல் உள்ள ஆப்பிள் கார்டன் பகுதியில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் இப்பகுதியில் புதியதாக ஒரு போர்வெல் அமைத்து மற்றும் அதற்குண்டான குழாய்கள் மற்றும் டேங்குகள் அமைக்க ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 17**

காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.9,6,16 மற்றும் 12 ஆகிய வார்டுகளில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் இப்பகுதிகளில் இருக்கும் ஆழ்துளை கிணற்றில் இருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் வசதி பொதுமக்கள் நலன் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 18**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 அம்பேத்கர் நகர் பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளான தெருவிளக்குகள் அமைத்து புதியதாக 12 கம்பங்கள் அமைக்க ஆகும் செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் :19**

இந்நகராட்சியில் அலுவலக கட்டிடப் பணி நடைப்பெற்றுக் கொண்டிருப்பதால், வசூல் மையம் மாற்றி அமைத்து 3 எண்கள் வரி வசூல் மையம் அமைத்து அதற்க்கு தேவையான இணையதள வசதி மற்றும் எலக்ட்ரிக்கல் பணிகள் போன்றவை மேற்க்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 20**

இந் நகராட்சிக்குப்பட்ட உரக்கிடங்கு பகுதியில் Bio – mining பணி மேற்க்கொள்ள கூடுதல் மின் இணைப்பு பெற மின் மாற்றி அமைப்பதற்கு மேடை மற்றும் இதர பணிகள் மேற்க் கொள்ள ஆகும் செலவின்ம் ரூ.50,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

அனுமதி வழங்கலம்.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

**30.12.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற  சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.02 முதல் 13 முடிய**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.14 முதல் 20 முடிய**

அனுமதிக்கப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்